28.05.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**ஆண்டுகளுக்கு யூரியா விலை உயர்த்தப்படாது: மத்திய அரசு**

அடுத்த 4 ஆண்டுகளுக்கு, யூரியாவின் விலையை உயர்த்தக்கூடாது என மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்று மத்திய ரசாயனத் துறை அமைச்சர் அனந்த குமார் தெரிவித்தார். மத்திய அரசின் ஓராண்டுகால ஆட்சியின் சாதனை விளக்கக் கூட்டத்தில் பங்கேற்க ஜார்க்கண்ட் மாநிலம், ஜாம்ஷெட்பூருக்கு புதன்கிழமை வந்த அவர், இதுகுறித்து செய்தியாளர்களிடம் கூறியதாவது:

புதிய யூரியா கொள்கையின்படி, அடுத்த 4 ஆண்டுகளுக்கு யூரியாவின் விலையை உயர்த்தக்கூடாது என மத்திய அரசு முடிவெடுத்துள்ளது.

இதற்கு யூரியா உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைவது அவசியாகும். தற்போது ஆண்டுக்கு 2.25 லட்சம் மெட்ரிக் டன்னாக உள்ள யூரியா உற்பத்தியை 70 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கினை அடைய, அஸ்ஸாம், தெலங்கானா, ஒடிஸா உள்ளிட்ட மாநிலங்களில் புதிய யூரியா உர உற்பத்தி தொழிற்சாலைகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஜார்க்கண்ட் மாநிலம் சிந்திரி, பிகார் மாநிலம் பாராயுனி ஆகிய இடங்களில் மூடப்பட்டுள்ள உரத் தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

அடுத்த 10 ஆண்டுகளில், எஃகு உற்பத்தியை இரண்டு மடங்காக பெருக்கும் நோக்கில் கர்நாடகம், ஒடிஸா, மேற்கு வங்கம், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில், 2.4 லட்சம் கோடி மதிப்பீட்டில், 4 புதிய எஃகு

உற்பத்தி தொழிற்சாலைகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்று அனந்த குமார் தெரிவித்தார்.

**சென்னை மற்றும் கடற்கரை மாவட்டங்களில் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை: வானிலை ஆய்வுமையம்**

சென்னை மற்றும் கடற்கரை மாவட்டங்களில் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. .கேரளா மற்றும் கடலோர கர்நாடகாவின் சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும் ஆந்திராவில் இடியுடன் கூடிய மழையோ அல்லது மிதமான மழையோ பெய்யவாய்ப்புள்ளது சென்னையை பொறுத்தவரை காலையில் இதமான காற்றும், பகல் பொழுதில் வறண்ட வானிலையே நிலவும். தமிழகத்தின் வடக்கு மற்றும் கடற்கரையோர மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் சிறிது குறைந்து காணப்படும். தமிழகத்தில் அதிகபட்சமாக 36 முதல் 42 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவாகும். குறைந்தபட்சமாக 26 முதல் 28 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை காணப்படும். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்சமாக 42 டிகிரி செல்சியசும், குறைந்தபட்சமாக 28 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும் காணப்படும். திருநெல்வேலியில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அங்கு அதிகபட்சமாக 38 டிகிரி செல்சியசும், குறைந்தபட்சமாக 27 டிகிரி செல்சியசும் வெப்பநிலை பதிவாகும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.


**ஹெக்டேருக்கு 20 டன் மகசூல்: "சின்ன' வெங்காயம் தரும் "பெரிய' லாபம்**



சின்ன வெங்காயம் விதை ஊன்றிய 65 முதல் 85 நாள்களில் ஒரு ஹெக்டேருக்கு 15 முதல் 20 டன் வரை மகசூலை தர வல்லது என்று தோட்டக் கலைத் துறையினர் தெரிவித்தனர். சின்ன வெங்காயம் ஒரு வெப்பமண்டலப் பயிராகும். இப்பயிரை ஏப்ரல் மாதம் முதல் மே, ஜூன் மாதங்களில் பயிரிடலாம். தண்ணீர் தேங்காத வளமான இரு மண்பாங்கான நிலம் சின்ன வெங்காய சாகுபடிக்கு ஏற்றதாகும். நிலம் தயாரித்தல்: நிலத்தை 2 அல்லது 3 முறை உழுது கடைசி உழவின் போது ஒரு ஹெக்டேருக்கு மக்கிய தொழு உரம் இடவேண்டும். பிறகு, 45 செ.மீட்டர் இடைவெளியில் பார் பார்த்திகள் தயார் செய்ய வேண்டும். விதையளவு: ஒரு ஹெக்டேருக்கு சின்ன விதை வெங்காயம் 1,500 கிலோ தேவைப்படும். விதை வெங்காயத்தை 10 செ.மீ. இடைவெளியில் பார் பாத்திகள் இருபுறத்திலும் ஊன்ற வேண்டும். பொதுவாக ஏப்ரல்- மே மாதங்கள் பயிரிடுவது சிறந்ததாகும். உரமிடுதல்: நடவுக்கு முன் பாத்திகளின் இருபுறமும் அடியுரமாக ஹெக்டேருக்கு 30 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து, 30 கிலோ சாம்பல் சத்துக்களை இட வேண்டும். நடவு செய்த 30 நாள்களுக்குப் பிறகு 30 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இட வேண்டும். பின்னர் மண் அணைக்க

வேண்டும். நீர்ப் பாய்ச்சுதல்: விதை வெங்காயம் நட்டப்பின் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 3 நாள்கள் கழித்து உயிர்த் தண்ணீர் இட வேண்டும். அதன் பின்னர் 7 முதல் 10 நாள் இடைவெளியில் நீர்ப் பாய்ச்சுவது நல்லது. பின்செய் நேர்த்தி: விதை வெங்காயம் நட்ட 30 நாள்கள் கழித்து களை எடுத்து மேலுரமிட்டு மண் அணைத்து நீர்ப் பாய்ச்ச வேண்டும். பிறகு தேவைக்கேற்ப களை எடுத்து நிலத்தை சுத்தம் செய்ய வேண்டும். பயிர் பாதுகாப்பு: சாறு உறிஞ்சும் பூச்சிக்களின் பாதிப்பு பரவலாகக் காணப்படும். இதை மோனோகுரோட்டோபாஸ்டாக்ஸ் மருந்தை 1 சதவீதம் தெளித்து பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். நோய்களில் இலைப் புள்ளி நோய் பரவலாகக் காணப்படும். இதைக் கட்டுப்படுத்த இன்டோபில் எம்.45 என்ற மருந்தை 2 சதவீதம் தெளிக்க வேண்டும். அறுவடை: வயலில் வெங்காயத்தின் இலைகள் 75 சதவீதம் காய்ந்து விட்டால் முதிர்ச்சி அடைந்து விட்டது என்பதை அறிந்துக் கொள்ள முடியும். அறுவடைக்கு 7 நாள்கள் முன்பு நிலத்துக்கு தண்ணீர் விட வேண்டும். பிறகு மண்ணைத் தோண்டி எடுத்து வேர், இலைகளை சுத்தம் செய்ய வேண்டும். அதன் பின்னர் நிழலில் காய வைத்து பாதுகாத்துக் கொள்ளலாம். இந்த முறையில் பயிரிட்டால் விதை ஊன்றிய 65 முதல் 85 தினங்களில் ஒரு ஹெக்டேருக்கு 15 முதல் 20 டன் வரை சாகுபடி பெறலாம் என தோட்டக்கலைத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**கறவை மாடுகளுக்கு தண்ணீர் ஏன் அவசியம்?**



கறவை மாடுகளுக்கு ஒரு நாளைக்குத் தேவையான சராசரி நீரின் அளவு 25-30 லிட்டர் ஆகும். எனவே, மாடுகளுக்கு தண்ணீர் அளிப்பது மிகவும் அவசியம். நீர் இன்றி அமையாது உலகு. நீர் இல்லாமல் எந்த உயிரினமும் வாழ இயலாது. மாடுகள் இதற்கு விதிவிலக்கல்ல. உயிரினங்கள் உயிர் வாழ, காற்றும், உணவும் எவ்வளவு அவசியமாக இருக்கிறதோ அதுபோல நீரும் அவசியமானதாகும். இதேபோல், கறவை மாடுகளுக்கு தண்ணீர் மிகவும் அவசியமானது. இதுகுறித்து செய்யாறு வட்டம் மோரணம் கால்நடை மருத்துவர் தங்கதுரை

கூறியதாவது:

கறவை மாடுகளின் உடல் எடையில் 70 சதவீதம் நீரும், பாலில் 87 சதவீதம் நீரும் உள்ளது. நீரானது உணவு உட்கொள்ளுதல், செரித்தல், செரித்த உணவிலிருந்து தேவையான சத்துப் பொருள்களை ரத்தத்தில் சேர்த்தல் உள்ளிட்ட வேலைகளுக்கு அவசியமாகிறது. இதேபோல், உடலில் உள்ள தேவையற்ற கழிவுப் பொருள்களை வெளியேற்றவும் உதவுகிறது. மேலும், உடலின் செல்களில் உள், வெளியில் உள்ள திரவத்தின் பி.எச். அழுத்தம், முக்கியமான உப்புச் சத்துகள் ஆகியவற்றை சீரான நிலையில் பராமரிக்கவும் உதவுகிறது.

மாடுகள் உட்கொள்ளும் நீரானது, குடிநீர், தீவனத்தில் உள்ள நீர், உணவுப் பொருள்கள் ஆக்சிஜனேற்றம் அடையும் நேரத்தில் உண்டாகும் நீர் என மூன்று வழிகளில் கிடைக்கிறது. பசுந்தீவனங்களில் 75-90 சதவீதம் நீரும், வைக்கோலில் 10-15 சதவீதம் நீரும் உள்ளது. 100 கிராம் புரதம் ஆக்சிஜனேற்றம் அடையும்போது 100 கிராம் நீரும், 100 கிராம் கார்போஹைட்ரேட் ஆக்சிஜனேற்றம் அடையும்போது 60 கிராம் நீரும் கிடைக்கிறது. கறவை மாடுகளுக்கு ஒரு நாளைக்குத் தேவையான சராசரி நீரின் அளவு 25-30 லிட்டர் ஆகும். நீர்க் குறைவினால் ஏற்படும் விளைவுகள்: குறைவான அளவு நீரை மாடுகள் அருந்தும்போது உணவு செரிமானம் பாதிக்கப்படுகின்றன. உடலின் வெப்ப நிலை அதிகரித்து சோர்வும், தளர்ச்சியும் ஏற்படுகிறது. சிறுநீரகமும் பாதிக்கப்படுகிறது. நீர் உட்கொள்ளுதல் 20-22 சதவீதம் ஆக குறையும்போது, கால்நடைகள் இறக்கவும் நேரிடுகிறது. ஆனால் நீர் அதிகம் உட்கொள்வதால் எந்தவித எதிர்விளைவுகளோ, பாதிப்போ ஏற்படுவதில்லை. நீர் எல்லா நேரங்களிலும் கிடைக்கச் செய்தல் அவசியம்.

நீர் இழப்பு : உட்கொள்ளும் நீரானது மூச்சுக் காற்றிலும், தோலின் மூலம் வியர்வையாகவும், சிறுநீர், சாணம் ஆகியவற்றுடனும் வெளியேற்றப்படுகிறது. சிறுநீரில் உள்ள யூரியாவானது நீரினால் பாதிப்பு இல்லாத அளவுக்கு கரைக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது.

உட்கொள்ளும் நீரின் அளவு சீதோஷ்ண நிலை, தீவனத்தின் தன்மை ஆகியவற்றை பொருத்து மாறுகிறது. கோடைகாலத்தில் உட்கொள்ளும் நீரின் அளவு 20-30 சதவீதம் அதிகமாக இருக்கும். அதேபோல் நார்ச் சத்து நிறைந்த பொருள்கள், புரதச் சத்து நிறைந்த பொருள்களை உட்கொள்ளும் போதும் நீரின் தேவை அதிகரிக்கிறது.

நீரின் தேவை பசுவை விட கன்றுகளில் அதிகமாகவும், பால் கொடுக்கும் பசுக்களில் இவை இரண்டையும் விட அதிகமாகவும் இருக்கும். தீவனத்தில் உள்ள உப்பின் அளவு, அதிக புரதம் நிறைந்த உணவு

ஆகியவை நீரின் தேவையை அதிகரிக்கின்றன.

சுத்தமான தண்ணீர்: மாடுகளுக்கு அளிக்கப்படும் நீரானது, சுத்தமாகவும் கிருமிகள் இல்லாமலும், துர்நாற்றமில்லாமலும் இருத்தல் மிகவும் அவசியம். அசுத்தமான நீரால் குடற்புழு நோய்கள், பாக்டீரியா எனும் நுண்ணுயிரி மூலம் அடைப்பான், தொண்டை அடைப்பான் போன்ற நோய்கள் ஏற்படலாம். தாது உப்புகளினால் உண்டாகும் நோய்கள் கோழிகளில் பேரிழப்பை உண்டாக்கக் கூடும். மாடுகளுக்கு அளிக்கும் நீருடன் கழிவு நீர் கலக்காமல் பார்த்துக் கொள்ளுதல் மிகவும் அவசியம். இதனால் நோய் உண்டாகும் கிருமிகள் குடிநீருடன் கலந்து கால்நடைகள், கோழிகளில் பெரும் சேதத்தை விளைவிக்கலாம்.

சுத்தப்படுத்தும் முறை: கறவை மாடுகளுக்கு அளிக்கும் நீரை கீழே குறிப்பிட்டவாறு சுத்தப்படுத்தி பின்னர் உபயோகிக்கலாம். குளோரின், ஹைட்ரஜன் பெராக்ஸ்டு ஆகியவற்றை கால்நடைகளுக்கு அளிக்கும் நீரில் கலந்து அளிப்பதால் நீரில் உள்ள நோய் உண்டாக்கும் கிருமிகள் அழிந்து நீர் சுத்தப்படுகிறது. பாலிபாஸ்பேட் என்னும் ரசாயனப் பொருளை நீருடன் கலந்து உபயோகிப்பதால் கால்சியம் கார்பனேட் போன்ற உப்புகள் படியாமல் தடுக்கிறது. புற ஊதாக் கதிர்களைக் கொண்டு நீரை சுத்தம் செய்யும் முறையும் வழக்கத்தில் உள்ளது.

உணவின்றி கால்நடைகள் ஒரு மாத காலம் கூட உயிர் வாழ இயலும். ஆனால் நீரின்றி ஒரு வாரம் கூட உயிர் வாழ்வது அரிது என்கிறார் கால்நடை மருத்துவர் தங்கதுரை.

**வெயிலின் தாக்கத்தால் விளைச்சல் பாதிப்பு: சென்னையில் காய்கறி விலை அதிகரிப்பு**



வெயிலின் தாக்கத்தால் சென்னையில் பெரும்பாலான காய்கறிகளின் விலை கடந்த வாரத்தைக் காட்டிலும் உயர்ந்துள்ளது.

சென்னை கோயம்பேடு சந்தைக்கு தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் உள்பட பல்வேறு மாநிலங்களிலிருந்து லாரி உள்ளிட்ட வாகனங்கள் மூலம் காய்கறிகள் தினமும் விற்பனைக்கு கொண்டுவரப்படுகின்றன.

கடந்த ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் தக்காளி, பெரிய வெங்காயம், முருங்கைக்காய் உள்பட பொதுமக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் காய்கறிகளின் விலை கிலோ ரூ.20-க்கும் கீழ் விற்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த வாரங்களில் வெயிலின் தாக்கம் அதிகரித்தால் காய்கறிகளின் விலை படிப்படியாக அதிகரித்து வந்தது.

இந்த நிலையில் கோயம்பேடு சந்தையில் புதன்கிழமை அவரை, முருங்கைக்காய், தக்காளி உள்பட பெரும்பாலான காய்கறிகள் கடந்த வாரத்தைக் காட்டிலும் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.15 வரை விலை அதிகரித்து காணப்பட்டது. குறிப்பாக சில்லறை விலையில் தக்காளி கிலோ ரூ.50 வரை விற்கப்பட்டது.

வழக்கமாக தினமும் 320 முதல் 350 லாரிகளில் 4,500 டன் வரை

காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்படும். சுட்டெரிக்கும் வெயில் காரணமாக காய்கறி உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த சில நாள்களாக 220 முதல் 250 லாரிகளில் மட்டுமே காய்கறி ஏற்றி வரப்படுகிறது. வரத்து தொடர்ந்து குறைந்து வருவதால் காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது என கோயம்பேடு சந்தையின் வியாபாரிகள் சங்க ஆலோசகர் செளந்தரராஜன் கூறினார்.

சென்னையில் புதன்கிழமை நிலவரப்படி காய்கறி விலை விவரம்:

| கோயம்பேடு | சந்தை மொத்த விலை (ரூபாயில்) | சில்லறை விலை (ரூபாயில்) |
|---|---|---|
| தக்காளி | 35 | 50 |
| பெரிய வெங்காயம் | 25 | 40 |
| சின்ன வெங்காயம் | 30 | 40 |
| உருளைக்கிழங்கு | 18 | 32 |
| முருங்கைக்காய் | 45 | 60 |
| கேரட் | 35 | 45 |
| பீன்ஸ் | 50 | 55 |
| அவரை | 40 | 50 |
| முட்டைக்கோஸ் | 18 | 25 |
| வெண்டைக்காய் | 25 | 36 |

| | | |
|---|---|---|
| பச்சைப் பட்டாணி | 180 | 195 |
| பாகற்காய் | 30 | 42 |
| கொத்தவரை | 22 | 30 |
| பீர்க்கன் காய் | 20 | 28 |
| காலிஃபிளவர் | 32 | 40 |
| வாழை இலை (ஒன்று) | 4 | 5 |

**அதிக விலைக்கு உரம் விற்றால் உரிமம் ரத்து**

திருவள்ளூர் மாவட்டத்தில் அதிக விலைக்கு உரம் விற்றால் கடைகளின் உரிமம் ரத்து செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் எச்சரித்தார்.திருவள்ளூர் மாவட்ட உர விற்பனையாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சிக் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தலைமை வகித்துப் பேசியபோது, அரசு நிர்ணயித்துள்ள விற்பனை விலையை விட கூடுதல் விலைக்கு உரங்களை விற்கக் கூடாது. அதிக விலைக்கு விற்பதாக புகார்கள் வந்தால் அந்த நிறுவனத்தின் உரிமம் ரத்து செய்யப்படும் என்றார்.

உதவி இயக்குநர் எல்.சுரேஷ், துணை இயக்குநர்கள் ஸ்டான்லி, எபிநேசன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில், தொடக்க வேளாண்மை கடன் சங்கச் செயலர்கள், உர விற்பனையாளர்கள் பங்கேற்றனர். சண்முகம் நன்றி கூறினார்.

**கோழி, கடல்பாசி வளர்ப்புக்கு இலவச பயிற்சி**

மத்திய அரசின் இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் சார்பில், கோழி, கடல்பாசி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. இதுகுறித்து அந்த நிறுவனத்தின் இயக்குநர் புருஷோத்தமன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மத்திய அரசின் இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், திருவள்ளூர், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள வேலையில்லா ஆண்கள், பெண்களுக்கு பல சுய தொழில்களுக்கு இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு மேற்கண்ட நிறுவனம் சார்பில் இலவச மதிய உணவு, மென் திறன் பயிற்சி, வங்கிக் கடன் பெறுவதற்கான வழிமுறைகள் கற்றுத்தரப்படுகிறது.

மேலும், தொழில் கற்றவர்களுக்கு கடனுதவி பெற வங்கிகளில் பரிந்துரையும் செய்யப்படுகிறது. தொழில் தொடங்குவதற்கான ஆலோசனைகள், அதற்கான வழிமுறைகளும் அளிக்கப்படுகிறது. ஜூன் 6-ஆம் தேதி முதல் கோழி வளர்ப்புக்கு 6 நாள்கள் இலவச பயிற்சி அளிக்கப்படவுள்ளது. ஜூன் 15-ஆம் தேதி முதல் 6 நாள்களுக்கு கடல்பாசி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி முடிந்தவுடன் அந்த நிறுவனம் சார்பில் சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சிகளில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் நேரில் வந்து முன் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இதுகுறித்து மேலும் விவரங்களுக்கு இயக்குநர், இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம், எண்.1213 ஈக்காடு சாலை (பழைய எஸ்பி அலுவலக கட்டடம்) திருவள்ளூர் என்ற முகவரியில் நேரிலோ அல்லது 044 27645060, 9444399892 என்ற தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என்று அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**எடை குறைவான 17 டன் உர மூட்டைகள் விற்பனைக்கு தடை**

ஒட்டன்சத்திரம் பகுதியில் வேளாண் துறை அதிகாரிகள் நடத்திய ஆய்வில், எடை குறைந்த பொட்டாஷ் உர மூட்டைகள் விற்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, 17 டன் உர மூட்டைகளை விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில், 400க்கும் மேற்பட்ட உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்து விற்பனையகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில், சில கடைகளில், எடை குறைந்த உர மூட்டைகள் விற்கப்படுவதாக புகார் எழுந்தது. அதன்பேரில், வேளாண் துணை இயக்குநர் (உரம்) கே.செல்வராஜ் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் ந.சம்பத்குமார் ஆகியோர், கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, ஒட்டன்சத்திரம் பகுதியில் உள்ள ஒரு கடையில் நடத்திய ஆய்வில் 50 கிலோ கொண்ட பொட்டாஷ் உர மூட்டைகளில், ஒவ்வொரு மூட்டையிலும் 10 கிலோ எடை குறைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, அந்த கடையில் வைக்கப்பட்டிருந்த 6 டன் உர மூட்டைகளை விற்பனை செய்ய அதிகாரிகள் தடை விதித்தனர். பின்னர், மாவட்டத்தில் உள்ள அனைத்து உரக் கடைகளிலும் ஆய்வு நடத்த அந்தந்த வட்டார வேளாண்மை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி திங்கள்கிழமை நடைபெற்ற ஆய்வில் ஒட்டன்சத்திரம் பகுதியில் உள்ள மற்றொரு கடையில், எடை குறைந்த மூட்டைகள் கண்டறியப்பட்டன. அதனைத் தொடர்ந்து, அந்த கடையில் வைக்கப்பட்டிருந்த 11 டன் உர மூட்டைகளை விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டது. மேலும், சம்பந்தப்பட்ட உர நிறுவனம் மற்றும் விற்பனையகத்தின் உரிமையாளர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ந.சம்பத்குமார் கூறியதாவது: ஆய்வில் சிக்கியுள்ள உர நிறுவனம் மற்றும் விற்பனையக

உரிமையாளரிடமிருந்து பெறப்படும் விளக்கத்தின் அடிப்படையில், துறை ரீதியான விசாரணை நடத்தப்படும்.

உர மூட்டையின் எடை அளவை விவசாயிகள் சரிபார்த்து வாங்க வேண்டும். மேலும், விலைப் பட்டியல் எழுதி வைக்காத உரக் கடைகள் குறித்தும், வேளாண்மை துறை அலுவலகத்துக்கு புகார் செய்யலாம். அதன்பேரில், சம்பந்தப்பட்ட கடைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

**வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கம்பம் பள்ளத்தாக்கு திசு வாழை**

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாதம் ஒன்றுக்கு 3 ஆயிரம் டன் திசு வாழைகள் ஏற்றுமதியாகின்றன.

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் திசு வாழை சாகுபடி அதிக அளவில் நடைபெற்று வருகிறது. கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில், தேனி விற்பனைக் குழு சார்பில் வாழைக் காய்களை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ரூ.31.80 லட்சம் செலவில் 25 டன் கொள்ளளவுள்ள குளிர் பதன கிட்டங்கி அமைக்கப்பட்டுள்ளது. கம்பம் கர்னல். ஜான்பென்னிகுவிக் பார்ம்ஸ் டிரஸ்ட் சார்பில் செயல்பட்டு வரும் இந்த குளிர்பதன கிடங்கில் இருந்து, 2 நாள்களுக்கு ஒரு முறை 20 ஆயிரம் கிலோ வாழைக் காய்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஏற்றுமதி தரத்திலான திசு வாழைக் காய்கள் சுத்திகரிக்கப்பட்டு, ஈரப்பதம் நீக்கி, அவற்றை பிளாஸ்டிக் பைகளில் அடைத்து சீல் வைத்து, குளிர் பதன கிடங்கில் பதப்படுத்தப்படுகிறது. அங்கு 2 நாள்கள் வைக்கப்படும் வாழைக் காய்கள், அங்கிருந்து குளிர்சாதனம் பொருத்திய கண்டெய்னர்களில் எடுத்துச் செல்லப்பட்டு, கப்பல் மூலம் ஈரான், ஈராக், துருக்கி, சவூதி அரேபியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது குறித்து கர்னல்.ஜான் பென்னிகுயிக்

பார்ம்ஸ் டிரஸ்ட் நிர்வாகி கார்த்திகேயன் கூறியதாவது: இந்த திசு வாழைகளுக்கு மத்திய கிழக்கு நாடுகளில் நல்ல கிராக்கி உள்ளது.

இங்கிருந்து அனுப்பப்படும் வாழைக் காய்கள் 40 முதல் 45 நாள்களுக்குப் பின்பு பழுக்க வைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. திசு வாழை உற்பத்தி செய்யும் விவசாயிகளிடம், அனைத்து சீசனிலும் உரிய ஆதார விலை நிர்ணயித்து வாழைக் காய்களை கொள்முதல் செய்கிறோம். இதன் சாகுபடிக்கு, அரசு வழங்கும் மானிய உதவி மற்றும் தொழில் நுட்ப உதவிகளை பெற்றுத் தர உதவுகிறோம். இந்த டிரஸ்ட் மூலம் நாளொன்றுக்கு ரூ.18 லட்சம் மதிப்பிலான வாழைக் காய்களை ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

திசு வாழை சாகுபடியில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் இவரை செல்போன் எண்:9786638686-ல் தொடர்பு கொள்ளலாம்.

**விவசாயிகள் விழிப்புணர்வு முகாம்**

உடுமலையை அடுத்துள்ள ராகல்பாவி கிராமத்தில் விவசாயிகள் விழிப்புணர்வு முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

இம்முகாமிற்கு, உடுமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மு.வே.சந்திரசேகர் தலைமை வகித்துப் பேசியது:

மக்காச்சோளத்திற்கு அதில் உள்ள மாவு மற்றும் புரதச்சத்துகளின் அடிப்படையில் நல்ல விலை கிடைக்கும். குறிப்பாக மக்காச்சோளத்தில் ஈரப்பதம் 12 சதவீதத்திற்குள் இருக்கவேண்டும். உள்புறம் சவ்வுத் துணி பொருத்திய சாக்குப் பைகளில் அவற்றைச் சேமிப்பதன் மூலமாக பூஞ்சானத் தாக்குதலைத் தடுக்க முடியும்.

காய வைத்த தானிய வகைகளைச் சேமித்து வைக்கும்போது, மாதம் ஒரு முறை தவறாமல் அவற்றைக் வெயிலில் காய வைக்கவேண்டும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளுக்கு ஏராளமான இலவச சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. கிடங்கில் இருப்பு

வைக்கப்பட்டுள்ள விளைபொருள்களுக்கு 5 சதவீதம் வட்டியில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது என்றார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண் அலுவலர் திருமகள்ஜோதி மற்றும் திரளான விவசாயிகள் கலந்துகொண்டனர். உதவி வேளாண் அலுவலர் முருகானந்தம் நன்றி கூறினார்.

**ஆந்த்ராக்ஸ்: மலைக் கிராம கால்நடைகளுக்கு தடுப்பூசி**

ஆந்த்ராக்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட பெண் யானை உயிரிழந்ததையடுத்து, சத்தியமங்கலத்துக்கு புலிகள் காப்பகத்துக்கு உள்பட்ட மலைக் கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு புதன்கிழமை தடுப்பூசி போடப்பட்டது. இப்பகுதியில் 9 கி.மீ. சுற்றளவில் உள்ள மலைக் கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

ஆசனூர் வனத்துக்குள் கால்நடைகளை மேய்ச்சலுக்கு காட்டுக்குள் அழைத்துச் செல்ல வேண்டாம் என புலிகள் காப்பக இணை இயக்குநர் சி.ஹெச்.பத்மா அறிவுறுத்தியுள்ளார்.

**வேளாண் கூட்டுறவுச் சங்கத்துக்கு பாராட்டு**

விதை நெல் உற்பத்தியில் பெரணமல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் சிறந்துவிளங்கிவருவதற்கு திருவண்ணாமலை மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் வெ.பெரியசாமி பாராட்டுத் தெரிவித்தார். தேசிய விவசாய, கிராமப்புற வளர்ச்சி வங்கியும், இந்தக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து விவசாயிகளுக்கான விதை உற்பத்தி, உயர்தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாமை புதன்கிழமை நடத்தின. இதைத் தொடக்கிவைத்து வெ.பெரியசாமி பேசியதாவது:

விதைப்பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக நிதியுதவிகளையும், பல்வேறு நலத் திட்ட உதவிகளையும் தமிழக அரசு அளித்து வருகிறது. பெரணமல்லூர் தொடக்க வேளாண்மை

கூட்டுறவுச் சங்கமானது விதை நெல் உற்பத்தியை அதிக அளவில் செய்து, மாநிலத்தில் முக்கியப் பங்கை வகிக்கிறது. இது விவசாயிகளுக்கு பெரும் பயனாக உள்ளதால், சங்க நிர்வாகத்தை பாராட்டுகிறேன் என்றார். இதையடுத்து, நபார்டு வங்கியின் உதவிப் பொதுமேலாளர் எஸ்.டி.சுதர்சன் பேசுகையில், வேளாண்மையின் நபார்டு வங்கியின் பங்கு, விவசாயிகளுக்கான திட்டங்கள் குறித்து பேசினார். மேலும், விதைப்பண்ணை அமைத்தல், வயல் ஆய்வு நடைமுறைகள், விதை சுத்திகரிப்பு பணி, சான்றளிப்பு நடைமுறைகள் குறித்து விதைச்சான்று உதவி இயக்குநர் எஸ்.விஸ்வநாதன், விதைச்சான்று அலுவலர்கள் பி.பழனி, கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

கூட்டுறவுத் துறையின் துணைப் பதிவாளர் சரவணன், கள மேலாளர் ஏ.இளங்கோவன், கூட்டுறவுச் சங்கத் தலைவர் டி.கே.முனியன், துணைத் தலைவர் கோவிந்தசாமி, செயலர் எஸ்.ராமசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக, சங்கத்தில் 100 பேருக்கு சேமிப்புக் கணக்குகள் புதியதாகத் தொடங்கப்பட்டன.

**வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை நிறுவ விவசாயிகள் கோரிக்கை**

பரமத்தி வேலூர் தமிழ்நாடு வெற்றிலை விவசாயிகள் சங்கம் சார்பில், வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை பரமத்தி வேலூரில் நிறுவ வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர்.

தமிழ்நாடு வெற்றிலை விவசாயிகள் சங்கத்தின் 38-ஆம் ஆண்டு பேரவைக் கூட்டம் பரமத்தி வேலூரில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு, சங்கத் தலைவர் நடராஜன் தலைமை தாங்கினார். செயலர் வையாபுரி வரவேற்றார். பொருளர் நடேசன் வரவு, செலவு அறிக்கையை வாசித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: ராஜா வாய்க்காலில் தொடர்ந்து தண்ணீர் விடவேண்டும். மராமத்து பணிகளின் போது,

முன்கூட்டியே விவசாயிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். பூச்சி மருந்து தெளிக்கும் தொழிலாளர்களுக்கு, தமிழக அரசு பாதுகாப்புக் கவசம் உள்ளிட்ட உபகரணங்களை இலவசமாக வழங்க வேண்டும். இல்லையெனில், குறைந்தபட்ச மானியத்தில் அவற்றைக் கொடுக்க ஆவண செய்ய வேண்டும். வெற்றிலையில் அதிக மருத்துவக் குணங்கள் உள்ளன. அவற்றை மேம்படுத்த ஆராய்ச்சிகள் செய்து, அதன் பயனை மக்களுக்கு தெரியப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விளம்பரப் படங்களில் குட்கா, புகையிலை ஆகியவற்றுக்கு வெற்றிலையைச் சேர்த்து தவறாக சித்தரிக்கப்பட்டு வருகிறது. அதை உடனடியாக தடை செய்ய வேண்டும்.

வெற்றிலைக்கு தனியாக நலவாரியம் அமைத்து, அவற்றைப் பாதுகாத்திட திட்டங்கள் மேற்கொள்ள வேண்டும். வெற்றிலை விவசாயிகள் நேரடியாக கடன் வசதி பெறும் வகையில், கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு ஆலோசனை வழங்க வேண்டும்.

நீண்ட கால கோரிக்கையான வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை இப்பகுதியில் அமைத்து, விவசாயிகள் பயன் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கோடை கால தீவன மேலாண்மையை கடைப்பிடிக்க அறிவுறுத்தல்**

கோடை கால தீவன மேலாண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என கோழிப்பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிட்ட செய்தி: அடுத்த 3 நாள்கள் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இதுவரை நிலவி வந்த மிக அதிகமான கோடை வெயிலின் தாக்கம், மேகமூட்டம் மற்றும் அதிகரித்த காற்றின் வேகம் காரணமாக இனி குறையத் தொடங்கும். அக்னி நட்சத்திரம்

நிறைவடைய இன்னும் 2 நாள்களே உள்ள நிலையில், வெயிலின் தாக்கமும் குறையத் தொடங்கும்.

மேகமூட்டமும், காற்றின் வேகமும் கோடையின் வெப்பத்தை தணித்து, கோழிகள் வெப்ப அதிர்ச்சி மற்றும் அயற்சி ஆகியவற்றில் இருந்து மீள வழிவகுக்கும். எனவே, தொடர்ந்து கடுமையான நீர் மற்றும் கோடை கால தீவன மேலாண்மையைக் கடைப்பிடித்து வரவேண்டும்.

**கால்நடைகளுக்கு நாளை குடற்புழு நீக்க முகாம்**

கால்நடைகளுக்கான இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை, குடற்புழு நீக்க முகாம் மே 29- ஆம் தேதி நடைபெறுகிறது.

தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு 2011 - 12, 2012 - 13- இல் கால்நடைகளை சிறப்பாகப் பராமரித்த பயனாளிகளுக்கு தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்தத் திட்டம் மூலம் வழங்கப்பட்ட வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் மே 29, 30 தேதிகளில் ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது.

எனவே, இந்தத் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் தெரிவித்தார்.

**அரியலூரில் அரசு வேளாண் கல்லூரி: விவசாயிகள் கோரிக்கை**

அரியலூர் மாவட்டத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியரகத்தில் ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

தமிழக ஏரி, ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பூ. விசுவநாதன்:

அரியலூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் கீழே சென்றுவிட்டது. பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 69 ஏரிகளையும், ஆற்றுப்பாதுகாப்பில் உள்ள 23 ஏரிகளையும், 201 ஊராட்சிகளில் உள்ள 400 ஏரி, குளங்களையும் வடகிழக்குப் பருவமழை காலத்துக்கு முன்பாக தூர்வார வேண்டும்.

மருதையாற்றில், வாரணவாசி, பொய்யூர், சுண்டக்குடி, தூத்தூர், கடம்பூர், முட்டவாஞ்சேரி ஆகிய 6 இடங்களில் தடுப்பணை அமைக்க வேண்டும். குருவாடி தலைப்பில் கொள்ளிடத்தின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டும். அரியலூர் மாவட்ட பொதுமக்களும், விவசாயிகளும் பயன்பெறும் வகையில், இந்தப் பகுதியில் அரசு வேளாண் கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் உலகநாதன்:

கரும்பு விவசாயிகளுக்கு அரசுக் கூட்டுறவு வங்கி மூலம் கடன் வழங்க வேண்டும். தா.பழூர் ஒன்றியத்தில் குடிசை வீடுகள் அதிகமாக உள்ளது. எனவே, தா.பழூரில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும். அரியலூரிலிருந்து விக்கிரமங்கலம், ஸ்ரீபுரந்தான் வழியாக கும்பகோணம் செல்வதற்கு கல்லூரி நேரத்தில் பேருந்து வசதி செய்ய வேண்டும். அரியலூர் மாவட்டத்தில் அதிக இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என்றார்.

ஆட்சியர் சரவணவேல்ராஜ் பேசியது:

அரியலூர் மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழை அளவு 954 மி.மீ. நிகழாண்டில் இதுவரை 104.7 மி.மீ மழை பெய்துள்ளது. அரியலூர் மாவட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும்

தனியார் உர விற்பனை மையங்களில் தேவையான அளவு உரங்கள் இருப்பில் உள்ளன. விதை கிராமத் திட்டத்தின் கீழ் 10 ஆண்டுகளுக்குள் வெளியிடப்பட்டுள்ள சான்று பெற்ற நெல் விதைகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 10, சிறுதானிய விதைகளுக்கு ரூ. 15, பயறு வகை விதைகளுக்கு ரூ. 25, எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு ரூ. 12 விதை விநியோக மானியமாக வழங்க உத்தரவு பெறப்பட்டுள்ளது. அரியலூரில் வேளாண் கல்லூரி அமைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பா. ரவீந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மனோகரன், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) பாபு, துணை இயக்குநர் (தோட்டக்கலை) கணேசன் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**மே 29 -ல் விவசாயிகள் குறைகேட்பு முகாம்**

புதுக்கோட்டையில் மாவட்ட அளிவிலான விவசாயிகள் குறைகேட்பு முகாம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் சு. கணேஷ் வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுக்கோட்டா மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் வரும் (29.5.2015) வெள்ளிக் கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் கூட்டத்தில் பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு விளக்கம் அளிக்க உள்ளனர். எனவே, மாவட்ட விவசாயிகள் இம்முகாமில் கலந்து கொண்டு விவசாயம் தொடர்பான கோரிக்கைகளை மட்டும் தெரிவித்துப் பயன் பெறலாம்.

**மே 29, 30-ல் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கால் நடைகளுக்கான இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை, குடல்புழு நீக்க முகாம் வரும் 29, 30 ஆகிய இரு நாள்கள் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக முதல்வரால் 15.9.2011-ல் தொடங்கப்பட்ட விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களால் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள பெண்களில் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வீதம், 31 மாவட்டங்களில், 5.50 லட்சம் பயனாளிகளுக்கு, 22 லட்சம் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளில், தமிழகத்தில் 21 மாவட்டங்களில், 48 ஆயிரம் பயனாளிகளுக்கு 48 ஆயிரம் கறவைப் பசுக்களும் 2011 முதல் 2014 வரை வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகளை ஊக்கப்படுத்தும் நோக்கில் 2011-12, 2012-13-ல் கால்நடைகளைச் சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு தமிழ்ப் புத்தாண்டில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் 29.5.2015 மற்றும் 30.5.2015 ஆகிய நாள்களில் கறவைப் பசுக்களுக்கு, இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் கிராம ஊராட்சிகளில் நடைபெற உள்ளது.

**வேப்பூரில் உலர் தீவனக் கிடங்கு திறப்பு**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் மானிய விலையில் கால்நடைகளுக்கான உலர் தீவன மையம் திறப்பு விழா புதன்கிழமை நடைபெற்றது.

உலர் தீவன மையத்தை திறந்துவைத்த சிதம்பரம் தொகுதி மக்களவை உறுப்பினர் மா. சந்திரகாசி பேசியது:

சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரமான கால்நடைகளின் தீவன பற்றாக்குறையைப் போக்க கால்நடை வளர்ப்போர் நலன் கருதி, அவற்றுக்கு உலர் தீவனத்தை (வைக்கோல்) மானிய விலையில் உலர் தீவனக் கிடங்கின் மூலம் வழங்க வேப்பூர் ஒன்றியத்துக்கு ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கு 1 கிலோ வைக்கோல் ரூ. 2 வீதம் மானிய விலையில் ஒரு கால்நடைக்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 கால்நடைகளுக்கு வாராந்திர தேவை அடிப்படையில் வாரம் ஒருமுறை 105 கிலோ இரண்டு மாதங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர் தங்களது குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2, கால்நடைகளின் இருப்பு விவரம் ஆகியவற்றை அருகேயுள்ள கால்நடை மருந்தகங்களில் கொடுத்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.

பதிவு செய்தவர்களுக்கு கால்நடை தீவன அட்டை வழங்கப்படும். இந்த அட்டையை காண்பித்து வேப்பூர் உலர் தீவன கிடங்கில் மானிய விலையில் விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கான வைக்கோல் பெற்றுக்கொள்ளலாம். வேப்பூர் கால்நடை மருந்தக வளாகத்தில் உள்ள உலர் தீவன கிடங்கின் மூலம் 33 ஊராட்சிகளில் உள்ள கால்நடைகள் பயன்பெற உள்ளன. இந்த வாய்ப்பை பயன்படுத்தி கால்நடைகளுக்கான தீவன பற்றாக்குறையை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்றார் அவர்.

விழாவில், மாவட்ட ஊராட்சித் தலைவர் கோ. சகுந்தலா, வேப்பூர் ஒன்றியக் குழுத் தலைவர் என். கிருஷ்ணகுமார், புதுவேட்டைக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் ப. கிருஷ்ணசாமி, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ஜி. அப்சல், சிறப்பறிஞர் ப. மோகன், உதவி இயக்குநர் எம். மனோகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

**கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம்**

பெரம்பலூர் அருகேயுள்ள பிரம்மதேசம் கிராமத்தில் ரோவர் வேளாண் அறிவியல் மையம், ரோவர் விவசாயக் கல்லூரி சார்பில் கால்நடைகளுக்கு குடல் புழு நீக்க முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

ரோவர் விவசாயக் கல்லூரி உதவிப் பேராசிரியர் முனைவர் வி. அரவிந்த் தலைமையில் நடைபெற்ற முகாமில், 100-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு குடல் புழு நீக்கம் செய்யப்பட்டது. தொடர்ந்து, விவசாயிகளுக்கு கால்நடைகளுக்கான பசுந்தீவனம், அசோலா உற்பத்தி என்ற தலைப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. ரோவர் வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்) டாக்டர் பி. ஆதிலட்சுமி, பிரம்மதேசம் ஊராட்சி கால்நடை மருத்துவர் டாக்டர் சி. அஞ்சலி ஆகியோர் கால்நடைகளைப் பரிசோதித்து சிகிச்சை அளித்தனர். ஏற்பாடுகளை ரோவர் விவசாயக் கல்லூரி இரண்டாமாண்டு நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் செய்திருந்தனர்.

**29, 30இல் கால்நடைகளுக்கான மருத்துவ முகாம்**

குமரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மருத்துவப் பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் மே 29, 30 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா.சவாண் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 9,279 பயனாளிகளுக்கு 37,116 வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த கால்நடைகளை நன்கு பராமரிக்கும் பயனாளிகளை ஊக்கப்படுத்தும் வகையில் கடந்த ஆண்டுகளில் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் விலையில்லா வெள்ளாடுகளின் எடையை அதிகரிக்க செய்வதற்காக தமிழகம் முழுவதும் வரும் 29, 30 ஆம் தேதிகளில் மருத்துவப் பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடைபெறவுள்ளது. பயனாளிகள் மட்டுமன்றி அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கார் பருவ சாகுபடிக்கு ஜூன் 16 இல் பாபநாசம் அணை திறப்பு**

கார் பருவ சாகுபடிக்கு கடனாநதி, ராமநதி அணைகளிலிருந்து ஜூன் 4 ஆம் தேதியும், பாபநாசம் அணையிலிருந்து ஜூன் 16 ஆம் தேதியும் தண்ணீர் திறந்து விடப்படும் என பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தாமிரவருணி பாசனத்தில் வடகிழக்குப் பருவமழை காலத்தில் கார் பருவ சாகுபடி ஜூன் மாதம் தொடங்கி, செப்டம்பர் மாதம் வரை நடைபெறும். கார் பருவ சாகுபடி பணிகளை தொடங்கும் வகையில் வழக்கமாக ஜூன் முதல் தேதியில் பாபநாசம், சேர்வலாறு அணைகளிலிருந்து தண்ணீர் திறக்கப்படும். சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் அணைகளின் நீர் இருப்பை கருத்தில் கொண்டு, பருவமழை தொடங்கிய பிறகு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. தண்ணீர் திறப்பதில் ஏற்படும் தாமதத்தால் கார் பருவ காலமும் தாமதமாகி விடுகிறது.

அறுவடை செய்யும் சமயமான அக்டோபர் மாதத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கி நெற்பயிர் நீரில் மூழ்கி சேதமடையும் நிலை உருவாகிறது. கடந்த 2014 இல் வடகிழக்குப் பருவத்தில் இயல்பான

மழை அளவை விட 165 சதவீதம் கூடுதலாக மழை பெய்ததால், 6 ஆண்டுகளுக்கு பிறகு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகள் முழுக் கொள்ளளவை எட்டின. இதனால் இப்பாசனத்தில் முழு அளவில் சாகுபடி செய்யப்பட்டது.

பிசான பருவம் அறுவடை முடிந்த நிலையில், அணைகளில் நீர் இருப்பு கணிசமாக இருந்ததால், முன் கார் பருவ சாகுபடிக்கு அணைகளிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நிகழாண்டில் அணைகளின் நீர்மட்டம் கணிசமாக இருப்பதால் ஜூன் முதல் தேதியில் கார் சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் திருநெல்வேலி மாவட்டத்தில் கல்லிடைக்குறிச்சி, அரிகேசவநல்லூரில் கன்னடியன் கால்வாயின் குறுக்கேயும், அம்பாசமுத்திரத்தில் நதியுன்னி கால்வாயில் குறுக்கேயும் பாலங்கள் கட்டும் பணி நடைபெற்று வருவதால் அணைகளிலிருந்து தண்ணீர் திறப்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

ஜூன் 16 இல் திறப்பு: இதனிடையே கார் பருவ சாகுபடிக்கு கடனாநதி, ராமநதி அணைகளிருந்து ஜூன் 4 ஆம் தேதியும், பாபநாசம், சேர்வலாறு அணைகளிருந்து ஜூன் 16 ஆம் தேதியும் தண்ணீர் திறக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அரசு அனுமதி கிடைத்ததும் மேற்கண்ட தேதிகளில் கார் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

அணைகளின் நீர்மட்டம்: புதன்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 77.40 அடி, சேர்வலாறு அணை 90.25 அடி, மணிமுத்தாறு அணை 83.70 அடி, கடனாநதி அணை 58.40 அடி, ராமநதி அணை 42 அடியாகவும் நீர்மட்டம் இருந்தது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 297.80 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 29 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையிலிருந்து 305

கனஅடியும், மணிமுத்தாறு அணையிலிருந்து 75 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**லால்பாக்கில் பலா, மாம்பழ மேளா**




பெங்களூரு: "கர்நாடக மாநில மாம்பழ அபிவிருத்தி மற்றும் மார்க்கெட் கார்ப்பரேஷன், தோட்டக்கலை துறை ஒருங்கிணைப்புடன், லால்பாக் வளாகத்தில் நாளை, மாம்பழம், பலாப்பழம் மேளா நடக்கவுள்ளது," என, மாம்பழ அபிவிருத்தி மற்றும் மார்க்கெட் கார்ப்பரேஷன் தலைவர் கமலாட்சி ராஜண்ணா தெரிவித்தார்.

**பெங்களூருவில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது:** லால்பாக் வளாகத்தில் மாம்பழம், பலாப்பழம் மேளாவை, நாளை காலை, 11:00

மணிக்கு, முதல்வர் சித்தராமையா துவக்கி வைக்கிறார். இம்மேளாவுக்காக, 100 விற்பனை கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மேளாவில், 'கார்பைட்' மூலம் பழுக்க வைக்கப்பட்ட பழங்களை விற்பனை செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. தினமும் காலை, 8:00 முதல், மாலை, 5:00 மணி வரை கடைகள் திறந்திருக்கும். பழங்களின் விற்பனை விலையை நிர்ணயிக்க, கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டு உள்ளது. அதேபோல், ஸ்வர்ணா, லால்பாக், மதுரா, பைரசந்திரா, தூகுகரே, ஜானகரே, சந்திரா, ருத்ராட்சி உட்பட வெவ்வேறு வகையான பலாப்பழங்கள் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன. இவ்வாறு, அவர் கூறினார்.

**கோடையில் ஆலங்கட்டி மழை**




விருத்தாசலம்: கத்திரி வெயில் வாட்டி வதைத்த நிலையில், விருத்தாசலம், கம்மாபுரம் பகுதிகளில், நேற்று திடீரென, ஆலங்கட்டி மழை பெய்ததால், பொது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.கத்திரி வெயில், கடந்த 4ம் துவங்கி, நாளையுடன் முடிவடைகிறது. கத்திரி வெயில் துவங்கிய ஓரிரு நாட்களில், பரவலாக மழை பெய்ததால், வெயிலின் தாக்கம் ஓரளவு குறைந்திருந்தது. இந்நிலையில், கடந்த ஒரு வாரமாக, வெயில், மக்களை

வாட்டி வதைத்தது. இதனால், பகல் நேரத்தில், மக்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கினர். கத்திரி வெயில் முடிவடையும் நிலையில், விருத்தாசலம், கம்மாபுரம் பகுதியில், நேற்று, பிற்பகல் 3:15 மணிக்கு, சூறைக்காற்று, இடி, மின்னலுடன் ஆலங்கட்டி மழை பெய்தது. விருத்தாசலம் பெரியார் நகர், கார்கூடல், கோபாலபுரம், கம்மாபுரம் பகுதி மக்கள், மழையில் நனைந்தபடி, ஆலங்கட்டிகளை சேகரித்தனர். மாலை 4:30 மணி வரை, மழை நீடித்ததால், வெயிலின் தாக்கம் குறைந்தது. இதேபோல், வேலூர், காட்பாடி, சத்துவாச்சாரியில், மாலை 3:30 மணி வரை, ஆலங்கட்டி மழை பெய்தது. இதனால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ஏற்றுமதியாகும் தேனி திசு வாழை: அன்னிய செலாவணி அமோகம்

தேனி: தேனி மாவட்டத்தில் திசு வாழை உற்பத்தியால், தேனி மாவட்டத்தில், ஒரு மாதத்தில், 71 லட்சம் ரூபாய் அன்னிய செலாவணியாக கிடைத்துள்ளது. இங்கு, 27 ஆயிரம் ஏக்கரில் திசு வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வெளி மாநிலங்களில் இருந்து வாழை கொள்முதல் செய்யப்பட்டதால், தேனி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. இதனால், விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர். இந்நிலையில் கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குளிர்பதன கிடங்கு அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் வாழைகள் இருப்பு வைக்கப்படுகின்றன. திசுவாழையை பக்குவப்படுத்தி சவுதி, ஈரான், துபாய் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். திசுவாழையை உரிய பக்குவத்தில் வெட்டி, 1 சதவீத கார்பன்டைசீன் கலந்த நீரில் கழுவுகின்றனர். பாலிதீன் கவர்களில் பேக்கிங் செய்து, உள்ளிருக்கும் காற்றை உறிஞ்சி, 14 டிகிரி சென்டிகிரேட் குளிர்பதனம் செய்து, வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். இரண்டு நாட்களுக்கு ஒருமுறை, 20 ஆயிரம் கிலோ வீதம், 12 கன்டெய்னர்களில் அனுப்பப்படுகின்றன. இவை, 40 நாட்கள்

வரை கெடாமல் பாதுகாக்கப்படுகிறது.

வாழை ஏற்றுமதி சங்க தலைவர் மகேந்திரன் கூறியதாவது: குளிர்பதன வசதியால், 240 டன் திசு வாழை ஏற்றுமதி செய்துள்ளோம். தினமும், 15 டன் வாழைகள் வருகின்றன. இதில், 11 முதல் 12 டன் ஏற்றுமதியாகிறது; மீதி உள்ளூர் விற்பனைக்கு செல்கிறது. நோய் பாதிப்பு இன்றி தரமான வாழையை கிலோ, 10 ரூபாய் வீதம் விவசாயிகளிடம் வாங்க தயாராக உள்ளோம். ஒரு மாதத்தில், 71 லட்சம் ரூபாய் அன்னிய செலாவணி ஈட்டியுள்ளோம். இவ்வாறு, அவர் கூறினார்.

## இளநீர் வணிக வளாகம் பயன்பாடு குறித்து கருத்து கேட்பு! 18 மையங்களில் கூட்டம் நடத்த திட்டம்

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அருகே, 3.25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இளநீர் வணிக வளாகம் பயன்பாடு குறித்து விவசாயிகளிடையே கருத்து கேட்க அதிகாரிகள் களம் இறங்கியுள்ளனர்.

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதியில், தென்னை சாகுபடி அதிகளவு மேற்கொள்ளப்படுகிறது. இளநீர், தேங்காய் விற்பனையில் இடைத்தரகர்கள் ஆதிக்கம் குறைக்கவும்; விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் நேரடியாக வியாபாரம் செய்யும் வகையிலும், இளநீர் வணிக வளாகம் அமைக்க அரசு திட்டமிட்டது.இதற்கென பொள்ளாச்சி அருகே திப்பம்பட்டியில், மூன்று கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் இளநீர் வணிக வளாகம் அமைக்கும் பணி ஆறு மாதங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டது. கட்டுமானப்பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், இந்த வணிக வளாகம் பயன்படுத்தும் விதம் குறித்து விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் நடத்த

திட்டமிடப்பட்டது. அதன்படி, பொள்ளாச்சி தெற்கு மற்றும் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் நேற்று பொள்ளாச்சியில் நடந்தது.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது: விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் நேரடியாக சந்தித்து இளநீர் விற்பனை செய்வதற்காக இளநீர் வணிக வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. திப்பம்பட்டியில் அமைந்துள்ள வணிக வளாகத்தில் இருப்பு வைக்காமல், இளநீர் உடனுக்குடன் சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட வேண்டும்.சென்னையிலும் இதுபோன்ற வணிக வளாகம் அமைத்தால், இங்கிருந்து அனுப்பும் இளநீர் அங்கு விற்பனை செய்ய ஏதுவாக இருக்கும். சிறு, குறு விவசாயிகளும் பயன்பெறும் வகையில், அவர்கள் இளநீரை விற்பனை செய்ய இந்த வணிக வளாகத்தில் ஏற்பாடு செய்து தர வேண்டும்.இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

## நா.பேட்டையில் மஞ்சள் ஏலம் ரூ.45 லட்சத்திற்கு விற்பனை

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை, வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 1,025 மூட்டை மஞ்சள், 45 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. தமிழகத்தில், ஈரோட்டுக்கு அடுத்தபடியாக, நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஏலம் நடக்கும். தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள், தங்கள் விளை நிலத்தில் சாகுபடி செய்துள்ள மஞ்சளை, அறுவடை செய்து விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி

செல்கின்றனர். அதன்படி நேற்று முன்தினம், நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,025 மூட்டை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. அதில், விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 8,915க்கும், குறைந்த பட்சம், 6,260 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், 8,069க்கும், குறைந்த பட்சம், 6,190 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 16 ஆயிரத்து, 700, குறைந்த பட்சம், 5,117 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று ஒரே நாளில், 1,025 மூட்டை மஞ்சள், 45 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## நெல் விவசாயத்துக்கு முன்பு பசுந்தாள் பயிரிட அழைப்பு! கரிம சத்தை அதிகரித்தால் விளைச்சலில் சாதிக்கலாம்

காரைக்குடி : தற்போதுள்ள மழையை கொண்டு விவசாயிகள் தங்கள் நிலங்களில் சணப்பை, தக்கை பூண்டு பயிரிட வேளாண் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தமிழகத்தில் மண் வகைகளில் கரிம பொருட்களின் அளவும், தழை சத்தின் அளவும் மிகவும் குறைவாக உள்ளது. 0.5 சதவீதத்துக்கு கீழே இருந்தால் அது கரிமசத்து குறைவாக உள்ளதாக கணக்கிடப்படும். தமிழகத்தில் 0.3 சதவீதத்துக்கும் கீழே தான் உள்ளது. கரிம சத்து இருந்தால் தான் மண்ணின் பவுதீக தன்மை மேம்படும். காற்றோட்டம், நீர்பிடிக்கும் தன்மை உருவாகும். இது குறைவாக இருந்தால் ஊட்டசத்துக்களை பயிர் கிரகிக்க முடியாத நிலை ஏற்படும். அந்த காலத்தில் கரிம சத்தை அதிகரிக்க இயற்கை உரமான ஆட்டு கிடை போட்டனர். தழைகளை மண்ணில் போட்டு மட்க செய்தனர். கடந்த 10 முதல் 15 ஆண்டுகளாக செயற்கை உரத்தை நிலத்தில் போட்டதால், இயற்கை உரமின்றி கரிமசத்து குறைந்து வருகிறது. இதை சமாளிக்க பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பை, தக்கை பூண்டு பயிரிடப்படுகிறது. காரைக்குடி மானாவாரி வேளாண்

ஆராய்ச்சி நிலையத்தில் சணப்பை, தக்கை பூண்டு பயிரிடப்பட்டு வருகிறது. செட்டிநாடு ஆராய்ச்சி நிலைய தலைவர் மெட்டில் கிரேஸ், மண்ணியல் நிபுணர் கண்ணன் கூறும் போது: பயிர்கள் செழித்து வளர, மண்ணில் கரிமசத்து அவசியம். தற்போது பெய்துள்ள மழையை கொண்டு, உழவு செய்து தக்கை பூண்டு, சணப்பை பயிர் செய்யலாம். 45 நாளில் இவற்றை மடக்கி உழுதால் கரிமசத்து அதிகரிக்கும். காரைக்குடி மானாவாரி ஆராய்ச்சி நிலையத்தில் 5 ஏக்கரில் தக்கை பூண்டு, சணப்பை பயிரிட்டுள்ளோம், என்றார்.

விபரங்களுக்கு 04565 283 080 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

விருதுநகர் : தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக்குழு கூட்டம் விருதுநகரில் மாவட்ட தலைவர் ராமதாஸ் தலைமையில் நடந்தது.மாவட்ட செயலாளர் சீனிவாசன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். இந்திய கம்யூ., மாவட்ட செயலாளர் ராமசாமி இன்றைய அரசியல் நிலவரம் குறித்து விளக்கினார். பிளவக்கல் அணை பாசனத்திற்கு உடனடியாக தண்ணீர் திறந்து விட வேண்டும் ,வீட்டுமனை பட்டாக்கள் தாமதமின்றி வழங்க வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட துணை த்தலைவர்கள் பால்சாமி,குருசாமி, அய்யணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**12 ஆண்டுகளுக்கு பிறகு கோடையில் நிரம்பும் முக்கடல் அணை நாகர்கோவிலில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது**



கோடைகாலத்தில் முக்கடல் அணை நிரம்புவது 12 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது நிகழ்வதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குறிப்பிடத்தக்க நீர்மட்டம்

நாகர்கோவில் நகர மக்களின் குடிநீர் தேவைக்கான ஒரே ஆதாரம் முக்கடல் அணை. குடிநீருக்காகவே பயன்படுத்தப்படும் ஒரே அணையும் இதுதான். நாகர்கோவிலில் இருந்து சுமார் 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இந்த அணை மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் 3 பக்கம் மலைகளால் சூழ்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இந்த அணையின் மொத்த கொள்ளளவு 25 அடி ஆகும்.

25 அடி என்பது அணையின் தரைமட்ட அளவில் இருந்து கணக்கிடப்பட்ட ஆழம் அல்ல. 25 அடிக்கும் கீழே மைனஸ் நிலையில் 20 அடி ஆழம் உள்ளது. 25 அடிக்கும் கீழே நீர்மட்டம் குறையும்போது நீர்

கலங்கலாக இருக்கும். சேறும், சகதியுமாக இருக்கும். எனவே, அணையின் நீர்மட்டம் 25 அடி என்றே கருதப்படுகிறது.

இந்த 25 அடி கொள்ளளவையும் முக்கடல் அணை ஆண்டுதோறும் எட்டுவது இயல்புதான் என்றாலும், கடந்த சில ஆண்டுகளில் அது நிறைவேறாமலும் போயிருக்கிறது. இந்த நிலையில் முக்கடல் அணையின் நேற்றைய நீர்மட்டம் 21.10 அடியாகும். இது, அணையின் வரலாற்று பதிவுகளில் குறிப்பிடத்தக்கதான நீர்மட்டம் ஆகும்.

21 அடியை தாண்டியது

அதாவது, தென்மேற்கு பருவமழை காலத்தில்தான் முக்கடல் அணை, முழு கொள்ளளவான 25 அடியை எட்டுவது வழக்கம். ஆனால் கோடை காலத்தில் 20 அடியை தாண்டுவது என்பது எப்போதாவது நிகழும் சம்பவம். கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு இதைப்போல கோடைகாலத்தில் நீர்மட்டம் 21 அடியை தாண்டி இருக்கிறது. அந்த நிலை அணையில் தற்போது நிகழ்ந்திருக்கிறது. அணையின் நேற்றைய நீர்மட்டம் 21.10 அடியாகும்.

கடந்த சில ஆண்டுகளில், கோடைகாலத்தில் முக்கடல் அணையில் தண்ணீர் வற்றி நாகர்கோவிலில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு, மக்கள் இன்னல்பட்டனர். இந்த நிலையில் இந்த ஆண்டு நாகர்கோவிலில் குடிநீர் தட்டுப்பாடே இல்லாமல் கோடைகாலம் முடிய இருப்பதையும், அதே நேரத்தில் முக்கடல் அணையில் நீர்மட்டம் 21 அடியை தாண்டியதை எண்ணியும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அதே நேரத்தில், அணை வற்றும்போது அணையை தூர்வாரி தண்ணீர் கொள்ளளவை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

**உளுந்தூர்பேட்டையில் ஆலங்கட்டி மழை பொதுமக்கள் மகிழ்ச்சி**



உளுந்தூர்பேட்டையில் ஆலங்கட்டி மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். திடீர் மழை : விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கோடை வெயிலின் பொதுமக்களை வாட்டி வதைத்து வந்தது. அதுவும் கடந்த 3 நாட்களாக வெயில் அளவு 100 டிகிரிக்கும் அதிகமாக இருந்தது. இந்த வெயிலின் தாக்கத்தினால் பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டு வந்தனர். இந்த நிலையில் நேற்றும் காலை முதல் மதியம் வரை வெயில் கொளுத்திய நிலையில் மாலையில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் திடீரென பரவலாக மழை பெய்தது. உளுந்தூர்பேட்டை யில் நேற்று மாலை 5.30 மணியளவில் பலத்த சூறை காற்று வீசியது. இதில் உளுந்தூர்பேட்டை பஸ் நிலையத்தில் கோவில் திரு விழாவிற்கு வைக்கப்பட்டிருந்த ராட்சத மின் அலங்காரம் சாய்ந்து அங்கிருந்த ஆட்டோவின் மீது விழுந்தது. இதில் ஆட்டோ டிரைவர்கள் தாமோதரன், கோவிந்தன், ராஜா உள்பட 6 பேரும், அந்த வழியாக சென்ற நித்யா என்பவரும் காயமடைந் தனர். அதேபோல் விருத்தாசலம் சாலையில் வைக்கப்பட்டிருந்த விளம்பர பதாகைகள் கீழே விழுந்ததில் அந்த வழியாக சென்ற ஐ.டி.ஐ. மாணவரான உளுந்தூர்பேட்டையை சேர்ந்த

சந்தோஷ் என்பவர் காயமடைந்தார். இதேபோல் பலத்த காற்றுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் நெய்வனை யில் ஏராளமான வாழை மரங்கள் சாய்ந்து விழுந்தன.

உளுந்தூர்பேட்டையில் ஆலங்கட்டி மழை

தொடர்ந்து உளுந்தூர் பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள நெய்வனை, கிளியூர், ஏமம் உள்ளிட்ட கிராமங்களில் மாலை 6 மணியளவில் திடீரென மழை பெய்தது. முதலில் சாரலாக பெய்ய ஆரம்பித்த மழை சற்று நேரத்தில் ஆலங்கட்டி மழையாக பெய்தது. மழையாக விழுந்த துளிகள் ஐஸ்கட்டி களாக இருந்தது. இந்த ஐஸ்கட்டிகளை பொதுமக்கள் மற்றும் சிறுவர், சிறுமிகள் கையில் எடுத்து ஆச்சரியத் துடன் பார்த்தனர். இதேபோல் செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி பகுதிகளில் நேற்று மாலை ½ மணி நேரத்திற்கும் மேலாக பலத்த மழை பெய்தது. இந்த மழையினால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.தாழ்வான இடங் களில் தண்ணீர் தேங்கியது. மேலும் விழுப்புரம், விக்கிர வாண்டி, மேல்மலையனூர், திருவெண்ணெய்நல்லூர் உள் பட மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலும் நேற்று மாலை சூறை காற்றுடன் பரவலாக மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்து இதமான குளிர்ந்த காற்று வீசியது. கடந்த சில வாரங்களாக கோடை வெப்பத்தின் தாக்கத் தினால் மிகவும் அவதிப்பட்டு வந்த பொதுமக்கள் நேற்று மாலை பெய்த மழையினால் மிகவும் மகிழ்ச்சி யடைந்தனர்.

தினகரன்

**மேட்டூருக்கு நீர்வரத்து சரிவு**




மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் 71.22 அடியாக உள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதிளில் மழை குறைந்ததையடுத்து, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வெகுவாக குறைந்துள்ளது. நேற்று முன்தினம் 1844 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 8 மணி நிலவரப்படி 1293 கன அடியாக குறைந்தது. அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 71.22 அடியாகவும், நீர் இருப்பு 33.75 டிஎம்சியாகவும் உள்ளது.

**செண்டுமல்லி, செவ்வந்தி வரத்து இல்லை**

கோவை, : ஆந்திராவில் நிலவும் 108 டிகிரி வெப்பநிலையால், அங்கு விளையக்கூடிய செண்டுமல்லி, செவ்வந்தி பூ உற்பத்தி பாதிக்கப்பட்டு, கோவைக்கு வரத்து நிலவவில்லை.கோவை பூ மார்க்கெட்டுக்கு செண்டுமல்லி (மஞ்சள்), செவ்வந்தி ஆகியவை ஒசூர், கிருஷ்ணகிரி, ஆந்திராவிலுள்ள குப்பம் ஆகிய பகுதியில் இருந்து வருகிறது. கடும் வெயிலால் இப்பூக்கள் வரத்து இல்லை.மற்ற பூக்களின் வரத்தும் குறைந்துள்ளதால் விலை கடந்த வாரத்தை விட உயர்ந்துள்ளது. கோவை பூ மார்க்கெட்டில் நேற்றைய விலை ஒரு கிலோ விபரம்: செண்டுமல்லி (ஆரஞ்சு) ரூ.30 ரூ.40, ரோஜா ரூ.10, சம்பங்கி ரூ.160 ரூ.180, மல்லி ரூ.120 ரூ.140, முல்லை ரூ.200, பட்டுப்பூ ரூ.40 ரூ.50, அரளி ரூ.20 ரூ.30, மருகு ஒரு கட்டு ரூ.2, மரிக்கொழுந்து ஒரு கட்டு ரூ.20, துளசி ஒரு கட்டு ரூ.30.
பூ மார்க்கெட்டிலுள்ள கோவை மாவட்ட மலர் வியாபாரிகள் சங்கம் பொருளாளர் அய்யப்பன் கூறுகையில், 'தற்போது வரத்து குறைந்துள்ளதால் விலை கடந்த வாரத்தை காட்டிலும் ஓரளவு உயர்ந்துள்ளது. திருமண முகூர்த்தம் தொடர்ந்து வருவதால் பூக்கள் வரத்து இதே நிலை நீடித்தால், மேலும் விலை உயரும்.' என்றார்.

**2 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் பொன்னணியாறு அணை**

மணப்பாறை அருகே திருச்சி-கரூர் மாவட்ட எல்லையில் பொன்னணியாறு அணை கட்டப்பட்டுள்ளது. மழை பெய்து வீணாகும் காட்டாற்று வெள்ளநீரை தேக்கி பாசனத்திற்கு பயன்படுத்தும் நோக்கில் பெருமாள் மலைக்கும் செம்மலைக்கும் இடையே கட்டப்பட்டது பொன்னணியாறு அணை. இந்த அணை 1975ல் அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதியால் திறந்து வைக்கப்பட்டது. இந்த அணையின்

மூலம் முகவனூர், மணியாரம்பட்டி, அணைக்கரைப்பட்டி, மம்பத்தை, சீத்தப்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் அணை நிரம்பி திறக்கப்படும் தண்ணீரால் மணப்பாறை மற்றும் வையம்பட்டியில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிகள் மற்றும் குளங்கள் நீர் ஆதாரம் பெறுகின்றன.

நிலத்தடி நீர் மட்டம் உயர்வதோடு கிணற்றில் நீர்மட்டம் உயரும். மேலும் வெளியேறும் தண்ணீர் டொம்பச்சி ஆறு, மாண்பூண்டி ஆறு, அரியாறு வழியாக காவிரி ஆற்றில் கலக்கிறது. தற்போது பூங்கா பல லட்சம் செலவில் மக்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. போதிய போக்குவரத்து வசதி இல்லாததால் பூங்காவிற்கு வரும் பொதுமக்கள் குறைந்த அளவே வந்து செல்கின்றனர். எனவே கூடுதல் பஸ் வசதி செய்து கொடுக்க வேண்டும். மேலும் இந்த டேமில் பல வகையான மீன்களை பிடித்து விற்பனை செய்து வருகின்றனர்.

ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.1.76 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

தொட்டியம்: காட்டுப்புத்தூர் அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 1,720 வாழைத் தார்கள் ரூ.1.76 லட்சத்துக்கு ஏலம் போனது. திருச்சி மாவட்டம், தொட்டியம் பகுதியில் மணமேடு சீனிவாநல்லூர், மகேந்திரமங்கலம், வரதராஜபுரம், திருநாராயணபுரம், காரைக்காடு, எம்.புத்தூர், நத்தம், காடுவெட்டி, காட்டுப்புத்தூர், சீலைப்பிள்ளையார்புத்தூர், ஸ்ரீராமசமுத்திரம், சின்னப்பள்ளிபாளையம், பெரியபள்ளிபாளையம், உன்னியூர் உட்பட பல்வேறு கிராமங்களில் வாழை சாகுபடி மிக அதிக அளவில் உள்ளன. பூவன், கற்பூரவள்ளி, ரஸ்தாளி உள்பட பல்வேறு வாழை ரகங்கள் பயிரிடப்படுகின்றன. இந்த வாழைத்தார்கள் வாரம் தோறும் திங்கட்கிழமை நடைபெறும்

காட்டுப்புத்தூர் சீலைப்பிள்ளையார்புத்தூர் சாலையில் உள்ள அரசு வாழைத்தார் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் ஏலம் விடப்படும். நேற்று முன்தினம் நடைபெற்ற ஏலத்திற்கு 780 லாட்டுகளில் 1,720 வாழைத்தார்கள் வந்தன. இதில் ரஸ்தாளி 1 தார் ரூ.300க்கும், கற்பூரவள்ளி ரூ.250க்கும், மொந்தன் ரூ.150க்கும், பூவன் ரூ.280க்கும் ஏலம் போனது ஆக மொத்தம் ரூ.1 லட்சத்து 76 ஆயிரத்து 950க்கு ஏலம் போனது. ஏலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 8 வாழைத்தார் மொத்த வியாபாரிகள் கலந்துகொண்டனர்.

**மானாவாரி நிலத்திற்கு ஏற்றது மக்காச்சோளம் வேளாண்துறை தகவல்**

பழநி, : மானாவாரி நிலத்தில் பயிரிட மக்காச்சோளம் ஏற்ற பயிரென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.மானாவாரி யில் மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு கோ1, கோ எச் (எம்)4, கோஎச் (எம்)5 ஆகிய ரகங்கள் ஏற்றவை ஆகும். ரகங்கள் வகைகளுக்கு ஏக்கருக்கு 25 கிலோவும், வீரிய ஒட்டு ரகங்களுக்கு 20 கிலோவும் விதைக்க வேண்டும். 45*20 சென்டி மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். விதை கடினப்படுத்த கருவேல மர இலைச்சாறு மற்றும் புங்கம் இலைச்சாற்றினை 1:1 என்ற வகையில் கலந்து 1:0:6 என்ற விகிதத்தில் விதை மற்றும் கலவையினை கலந்து 16 மணி நேரம் ஊர வைத்து நிழலில் உலர்த்தி பின்பு புங்கம் இலைதூள் கிலோவிற்கு 300 கிராம் கலந்து விதைக்க வேண்டும்.தழைச்சத்து 30 கிலோ அல்லது யூரியா 65 கிலோ, மணிச்சத்து 30 கிலோ அல்லது சூப்பர் பாஸ்பேட் 188 கிலோ மற்றும் சாம்பல் சத்து 30 கிலோ அல்லது மூரியேட் ஆஃப் பொட்டாஷ் 50 கிலோ ஆகியவற்றை அடி உரமாக இட வேண்டும்.
1 எக்டேருக்கு சிறுதானியம் 12.5 உடன் தொழுஉரம் 50 கிலோ கலந்து பார்களின் ஓரங்கில் இட வேண்டும். அட்ரசின் 900 லிட்டர் தண்ணீரில் 500 கிராம் கலந்து விதைத்த 3வது நாள் தெளிக்க வேண்டும். பயிர் வகை பயிர்கள் ஊடுபயிராக செய்திருந்தால் அலக்குளோர் 4 லிட்டர் அல்லது

பென்டிமெத்தலின் எக்டேருக்கு 3.3 லிட்டர் தெளித்து களை நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாமென வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**விளை பொருட்களுக்கு உரிய விலை நிர்ணயம் விவசாயிகள் சங்கம் தீர்மானம்**

போடி, : போடியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் மாநிலக்குழு கூட்டம் மற்றும் கருத்தரங்கம் வர்த்தக சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. அகில இந்திய பொதுச்செயலாளர் ஹன்னன் முல்லா தலைமை தாங்கினார். மாநில தலைவர் பாலகிருஷ்ணன், மாநில பொதுச்செயலாளர் சண்முகம் முன்னிலை வகித்தனர். மாநில சங்க பிரதிநிதிகளும் பொறுப்பாளர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: மத்திய அரசு நிலம் கை யகப்படுத்துவதை தடுக்க வேண்டும். விவசாய விளை பொருட்களுக்கு போதிய விலை நிர்ணயம் செய்ய வேண்டும். விவசாயிகளின் தற்கொலையை தடுக்க வேண்டும். தற்கொலை செய்த விவசாயிகளின் குடும்பத்தினருக்கு அரசு வேலையும், நஷ்ட ஈடும் வழங்க வேண்டும். இது தொடர்பாக தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிடில், சட்டமன்ற கூட்ட தொடரின் போது உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும்" உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கம்பம் பகுதியில் முதல் போகத்திற்கு நாற்றாங்கால் அமைக்கும் பணி தீவிரம்**

கம்பம், : கம்பம் பகுதியில் முதல் போகத்திற்கு நாற்றாங்கால் அமைக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக உள்ளனர்.கம்பம் பள்ளத்தாக்கில்

லோயர்கேம்ப் முதல் பழனிசெட்டிபட்டி வரை சுமார் 14 ஆயிரத்து 707 ஏக்கரில் இருபோக நெல் விவசாயம் செய்யப்படுகிறது.கடந்த சில மாதங்களுக்கு முன், முல்லைப்பெரியாற்றில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் நிறுத்தப்பட்டதால், கம்பம், கூடலூர், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, அணைப்பட்டி பகுதிகளில் விவசாயிகள் கோடை கால பயிர்களை பயிரிட்டு வந்தனர். ஜூன் மாதம் முதல் வாரத்தில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்ற நிலையில் தற்போது முதல் போக நெல் நடவுப்பணிக்கு நாற்றாங்கால் அமைக்கும் பணியிலும், உழவுப்பணியிலும் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "கடந்த ஆண்டை காட்டிலும் இந்தாண்டு போதிய மழை பெய்ததால் முல்லைப்பெரியாறு அணையில் முதல் போக நெல் சாகுபடிக்கு தேவையான தண்ணீர் உள்ளது. எனவே விவசாயிகள் ஜூன் முதல் வாரம் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்ற நம்பிக்கையில் விவசாய பணிகளில் ஈடுபட்டுள்ளோம்" என்றனர்.

**காவிரி பாசன வெற்றிலைக்கு வெளிமாநிலங்களில் வரவேற்பு**

கரூர்: கரூர் வட்டாரத்தில் புகழூர், புங்கோடை, சேமங்கி, முத்தனூர், பாலத்துறை உள்ளிட்ட காவிரி பாசன பகுதிகளில் வெற்றிலை சாகுபடி ஆயிரக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முன்பு நிலத்திற்கு சொந்தக்காரர்களே சாகுபடி செய்துவந்தனர். காலப்போக்கில் நிலத்தை குத்தகைக்கு விட தொடங்கியுங்ள்ளனர். வெற்றி கொடிக்கால்களுக்கு காவிரியாற்று நீ,ர் பாசன ஆதாரமாக உள்ளது. புகழூர் பகுதி மற்றும் கரூர் வட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில் விளையும் வெற்றிலைகள் வேலாயுதம்பாளையம் வெற்றிலை மண்டிக்கும், வேலுரில் உள்ள தினசரி வெற்றிலை ஏல மார்க்கெட்டிற்கும் விற்பனைக்காக அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. வெற்றிலை மண்டிகளுக்கு திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர், மோகனூர், பரமத்தி போன்ற நாமக்கல் மாவட்ட விவசாயிகளும் விற்பனைக்காக வெற்றிலை

கொண்டு வருகின்றனர். இங்கு நடைபெறுகின்ற வெற்றிலை ஏலத்தில் கலந்துகொள்வதற்காக கரூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை போன்ற ஊர்களில் இருந்து மொத்த வியாபாரிகள் வந்து வெற்றிலை ஏலம் எடுக்கின்றனர். லாரிகள் மற்றும் ரயில்கள் மூலம் மேற்கண்ட ஊர்களுக்கு அனுப்பப்படுகிறது.

மேலும் கர்நாடகா, ஆந்திரா, கேரளா உபி, மராட்டியம், உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் வெற்றிலை அனுப்பப்படுகிறது. வறட்சி காரணமாக வெற்றிலை விளைச்சல் குறைந்திருந்த நிலை காவிரியில் நீர்வரத்து காரணமாக நிலைமாறியுள்ளது. தற்போது பெய்த மழையால் வெயில் கொடுமையில் இருந்து வெற்றிலை பயிர் காப்பாற்றப்பட்டுள்ளது. காவிரியாற்றுப்பாசனத்தில் இக்கரையில் உள்ள கரூர் மாவட்ட கிராமத்தினர் அக்கரையில் உள்ள நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வெற்றிலை சந்தையில் வெற்றிலை விற்பனை செய்கின்றனர். வெற்றிலை பயிர் சாகுபடி செய்வதற்கு வேளாண்துறையினர் உரிய ஆலோசனைகளை வழங்கி. மானியம் அளிக்க வேண்டும் என்பது விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. சேரன் மெட்ரிக் பள்ளி மாணவிகளுக்கு பாராட்டு கரூர்: 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் 2 மற்றும் 3ம் இடங்களை பெற்ற கரூர் வெண்ணைமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவிகளை கலெக்டர் பாராட்டினார்.

10ம்வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் வெண்ணைமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி வேதவர்ஷனி 498 மார்க் பெற்று 2ம்இடம் பெற்றார். 497 மார்க் பெற்று 3ம்இடத்தில், தாரணி, காவியா, பவித்ரா, பிரியதர்ஷினி, விஸ்வபாரதி ஆகியோர் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி பெற்ற மாணவிகளை கரூர் கலெக்டர் ஜெயந்தி பாராட்டி பரிசு வழங்கினார். மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருவளர் செல்வி, மாவட்ட கல்வி அலுவலர் ராஜேந்திரன், பள்ளி ஆலோசகர் செல்வதுரை, தாளாளர் பாண்டியன், முதல்வர் பழனியப்பன் ஆகியோர் பாராட்டினர்.

சேரன் பள்ளி மாணவர்கள் 561 பேர் தேர்வெழுதி அனைவரும் 100 சதவீத தேர்ச்சி பெற்றனர். ஒவ்வொரு வருடமும் மாநில, மாவட்ட அளவிலான இடங்களை இப்பள்ளி பிடித்து வருகிறது. மேலும் ஆங்கிலம் 2 பேர், கணிதம் 57 பேர், அறிவியல் 270 பேர், சமூக அறிவியல் 165 பேர், என 494 பேர் 100க்கு 100 மார்க் பெற்று தேர்ச்சி பெற்றனர். 72 பேர் 490க்கு மேலும், 187 பேர் 480க்கு மேலும், 270 பேர் 470க்கு மேலும், 325 பேர் 460க்கு மேலும், 374 பேர் 450க்கு மேலும் மார்க் பெற்று சாதனை படைத்துள்ளனர் என பள்ளி முதல்வர் தெரிவித்தார்.

**நிலக்கடலையில் சுருள்பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? : வேளாண் துறை விளக்கம்**

கறம்பக்குடி: நிலக்கடலையில் சுருள்பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்து வேளாண் துறை விளக்கம் அளித்துள்ளது.

புதுக்கோட்டை மாவ ட்டம், கறம்பக்குடி வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலையில் சுருள் பூச்சித் தாக்குதலுக்கு வாய்ப்புள்ளது. இதை துவக்கத்திலேயே முறையான தொழில்நுட்பத்தை கையாண்டால் கட்டுப்படுத்தலாம் என்று கறம்பக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: கறம்பக்குடி வட்டாரத்தில் தற்போது நிலவும் வறண்ட வானிலை காரணமாக மானாவாரி நிலக்கடலை பயிரில் சுருள் பூச்சிகளின் தாக்குதல் ஏற்படக்கூடும். குறிப்பாக, வறண்ட வானிலை இருக்கும் போது சுருள் பூச்சிகள் அதிகமாக இருக்கும். அவை இலைகளில் உள்ள பச்சையத்தை சுரண்டி சாப்பிட்டு உயிர் வாழும். இதனால் சுருள் பூச்சிகள் தாக்குதலுக்கு உள்ளான செடிகள் காய்ந்தும், சுருங்கியும் காணப்படும். புழு ஆரம்பத்தில் ஒரு நரம்பில் துளையிட்டு அதனுள் இருக்கும்.

பின்னர் இலைகளை சுருட்டி அதனுள் வாழும். இந்த அறிகுறிகள் தென்பட்டால் உரிய முறைகளை கடைபிடித்து கட்டுப்படுத்த வேண்டும். குறிப்பாக, தினமும் இரவு 7 மணி முதல் 9 மணி வரை விளக்குப் பொறி வைத்து பூச்சிகள் நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும். மேலும் அசாடிராக்டின் 500 மில்லி தெளித்து கட்டுப்படுத்தலாம். அல்லது குவினாள்பாஸ் 25. இ.சி-400, மைமெத்தோயேட் 30.இ.சி-250 மில்லி,குளோரிபைரிபாஸ் 20 இ.சி-500 மில்லி, லாம்டா சையகுலோத்தின் 5 இ.சி-80 மில்லி இவற்றில் ஏதாவது ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம் என்றார்.

**திருக்கடையூரில் விவசாயிகளுக்கு இலவசமாக மண்மாதிரி பரிசோதனை**

தரங்கம்பாடி: விவசாயிகளுக்கு மண்மாதிரி பரிசோதனை இலவசமாக செய்யபடுவதாக வேளாண் உயர் அதிகாரி தெரிவித்தார். திருக்கடையூரில் உள்ள அரசு விதைப் பண்ணையை வேளாண் கூடுதல் இயக்குனர் ஹாஜகான் ஆய்வு செய்தார். அப்போது குறுவை சாகுபடிக்கு தேவையான சான்று விதைகள் இருப்பு உள்ளதா? என்பதையும் ஆய்வு செய்தார். மேலும் காலகஸ்திநாதபுரம் வயலில் நடமாடும் மண்வள அட்டை இயக்கத்தின் சார்பில் மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலகத்தில் பன்னீர் செல்வம், சுகன்யா முன்னிலையில் மண்மாதிரி சேகரிப்பு பணி நடைபெறுவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் விவசாயிகள் மண்மாதிரி சேகரிப்பது குறித்தும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். மேலும், இம்மண்மாதிரி சேகரிப்பு பணியில் விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொள்ள வேண்டும் என்றும், இம்மண்மாதிரி பரிசோதனை இலவசமாக விவசாயிகளுக்கு செய்யய்படுவதாகவும், இப்பணி 3 ஆண்டுகள் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

அவருடன் நாகை வேளாண் இணை இயக்குனர் (பொ) கணேசன், வேளாண் துணை இயக்குனர் விஜயகுமார், செம்பனார்கோவில்

வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன், தலைஞாயிறு வேளாண் உதவி இயக்குனர் சந்திரகாசன், வேளாண் அலுவலர் கனகம், சங்கரநாராயணன், அரசு விதைப் பண்ணை வேளாண் அலுவலர் முருகராஜ், துணை வேளாண் அலுவலர் ரவிச்சந்திரன் உதவி வேளாண் அலுவலர்கள் சந்திரசேகரன், ரவிச்சந்திரன், உதயசூரியன், பிரபாகரன் அட்மா திட்ட மேலாளர் திருமுருகன் உதவி மேலாளர் பார்த்திபன் சுகன்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும்**

கொள்ளிடம்: குறுவை பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கொள்ளிடம் ஒன்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.நாகை மாவட்டம், கொள்ளிடம் ஒன்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகக்குழு கூட்டம் புத்தூர் கிராமத்தில் நடந்தது. கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் சிவராமன் தலைமை வகித்தார். ஒன்றிய துணை செயலாளர் கஜேந்திரன், ஊராட்சி தலைவர் ஜீவாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இளைஞர் மன்ற தலைவர் சஞ்சீவி வரவேற்று பேசினார். மாநிலக்குழு உறுப்பினர் சீனிவாசன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில், பெட்ரோல், டீசல் விலை உயர்வை திறம்பப்பெற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை மத்திய அரசு விரிவுபடுத்த வேண்டும். விவசாயிகள் நலன் கருதி மத்திய, மாநில அரசு காவேரி மேலாண்மைகுழு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறுவை பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும். கொள்ளிடம் ஒன்றிய அலு வலகத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் பத்திரப் பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட நாகை கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.கூட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள்

மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஒன்றிய பொருளாளர் ஜெயசக்திவேல் நன்றி கூறினார்.